**கல்முனை மாநகர சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கல்முனை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இந்த ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றவை தொடர்பாக கரிசனை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2011 – 2015 காலப்பகுதியில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைக்காக காரைதீவு பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ரூபா3,023,329 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படவேண்டிய செலவினத்தினை நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும் | இது தொடர்பிலான போதிய ஆவணங்களையும் அதன் விபரங்களையும் காரைதீவு பிரதேச சபை எமக்கு அறியத்தரவில்லை. அதனால் இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் குறித்த மியாய்வு காலப்பகுதியில் ரூபா-500,000.00 செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ii) 2018 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு குத்தகையில் அறவிட வேண்டிய ரூபா 450,000 தொகை கணக்குளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அறவிடவேண்டிய வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | குறித்த நிலுவைகளில் முடியுமானவற்றை அறவிடவும் ஏனையவற்றை உரிய அனுமதி பெற்று பதிவழித்தல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) 2018 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 199 பொருட்கள் மற்றும் 1,240 நூலகப் புத்தகங்கள் அத்துடன் ரூபா 155,595 இற்கு விற்பனை செய்யப்பட்ட 82 வகையான பொருட்களின் கிரயப் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | அழிக்கப்பட்ட பொருட்களின் கிரயப் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் பதிவழித்தல் வேண்டும். | நிதிக் கூற்று தயாரிக்கும் போது கழிக்கப்படும் சரியான பெறுமதி சரியாக வந்து சேராத படியால் மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றில் கழிக்கப்படவில்லை எனவும் எதிர்வரும் நிதிக் கூற்றில் கழிக்கப்படும். |
| (iv) ரூபா 32 மில்லியன் வைப்புச் செய்யப்பட்ட நிலையான வைப்புக்கான ரூபா 4 மில்லியன் வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். | மூலதனத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 வருமான விடயங்கள் தொடர்பில் கணக்கு மீதிகள் மற்றும் பதிவேட்டின்படி மீதிகளிற்கிடையிலான ரூபா 39,399,166 கூட்டுத்தொகை வேறுபட்டிருந்தது. | வேறுபாடுகளை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 119,239,000 பெறுமதியான காணி கட்டிடம் தொடர்பில் காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு என்பன கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காணிப் பத்திரங்களுக்கு மாத்திரமே உரிமைப்பத்திரங்கள் இல்லாமல் காணப்படுகின்றன. |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், பிரிவு 218 | நிர்வாகம் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது மாநகர முதல்வரை சார்ந்ததாகும் எனினும் கடந்த காலங்களில் இவ்வாறான அறிக்கை எந்தவொரு முதல்வராலும் தயாரிக்கப்பட்டதாக தெரியவில்லை. எனினும் தற்போது முதல்வரின் பொறுப்பில் சபை உள்ளதால் இவ்வாறான அறிக்கை எதிர்காலத்தில் தயாரித்து கையளிக்கப்படும். |
| (ஆ)இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட வைப்புக்கள் ரூபா28,323,057 தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 18,437,411 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,843,893 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 11,100 | 21,231 | 25,460 | 90,465 | 11,100 | 12,349 | 9,222 | 94,693 |
| வாடகைகள் | 19,980 | 17,623 | 17,202 | 39,544 | 19,980 | 15,592 | 15,261 | 39,123 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,705 | 10,868 | 10,868 | -- | 9,705 | 8,491 | 8,491 | -- |
| ஏனைய வருமானம் | 45,275 | 56,725 | 55,455 | 1,269 | 45,275 | 34,435 | 34,435 | -- |
| | 86,060 | 106,447 | 108,985 | 131,278 | 86,060 | 70,867 | 67,409 | 133,816 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 47,900 அசைவற்ற ஆதனம் மற்றும் காணிகளில் ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய சோலைவரி ரூபா 91.6 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நபர்களுக்கு காலத்திற்கு காலம் அறிவித்தல்கள் வழங்கப்பட்டு இயன்றளவு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் வருடத்தில் ரூபா 24,228,718.38 தொகை அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் பொதுச்சந்தைக் குத்தகை ரூபா 12,314,393, இறைச்சிக் கடை குத்தகை ரூபா 7,661,912 மற்றும் கடை வாடகை ரூபா.13,657,443 என்பவற்றை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | நிலுவையினை அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 1996 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பாதுகாப்பு குத்தகை ரூபா 3,394,613 தொயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | நிலுவையினை அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) பொதுச்சந்தையில் 64 கடைகளிலிருந்தான நிலுவை வாடகை ரூபா.5,130,143 தொகை 08 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவையினை அறவிட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி கடைகள் திருத்தம் செய்ய வேண்டியுள்ளதால் நிலுவை அறவீடு செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 10,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும், மாநகர சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது 1980 ஆம் ஆண்டு தொடக்கம் மாதாந்தம் ரூபா.500 தொடக்கம் ரூபா 4,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 60 மில்லியன் தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது. | கேள்வினை அடிப்படையாக கொண்டு புதிய குத்தகைளாளிற்கு வழங்குதல் வேண்டும். | தற்போது 2020 ஆம் வருடத்தில் இருந்து வாடகை அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 2019 ஆண்டில் பொதுச் சந்தை குத்தகை நிலுவை, மீன்சந்தை குத்தகை நிலுவை மற்றும் வாகனத் தரிப்பிட குத்தகை நிலுவைகள் முறையே ரூபா 1,310,750, ரூபா 276,000 மற்றும் ரூபா 1,218,100 தொகைகளை இதுவரை காலமும் அறவிடப்படாமல் உள்ளது. | நிலுவைகள் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்காலத்தில் நிலுவைகள் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்காக கல்முனை மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வைகள் மற்றும் மேலதிக முத்திரை தீர்வைகளை மாநகர சபையினால் கணக்கிட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளிற்கான முத்திரைத் தீர்வையினை வசூலிக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குரிய முத்திரை தீர்வைகள் விபரங்களை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் இருந்து பொறுவதில் சிரமங்கள் காணப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் உப விதிகள் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் இயற்றப்படல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக சமர்பிக்கப்படவுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டல் வேண்டும். | எதிர் காலத்தில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007ம் ஆண்டு Italian Oversease நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட மீள்சுழற்சி நிலையம் (Recycling Centre) நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து எதுவிதமான மீள்சுழற்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிலையத்தினை வினைதத்திறனான முறையில் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டம். | பசளை உற்பத்தி நிலையத்தில் பசளை உற்பத்திக்காகவும் மீள் சுழற்சி செய்வதற்காகவும் கழிவுகள் தெரிவு செய்யப்படும் போதும் பிளாஸ்டிக் போதியளவு இல்லாமையினாலும் பசளை உற்பத்தி நிலையத்திற்கு சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை கொண்டு சென்று கொட்டுவதற்கு பாதைகள் சீரின்மையாலும், பிரதான பாதையில் எமது வாகனங்களின் போக்கு வரத்துக்கு தடை ஏற்பட்டதாலும் குறித்த ீடயளவஉை சுநஉலஉடபை இயந்திரம் குறைவாக இயக்கத்தில் உள்ளது என்பதுடன் தற்போது இது சீர் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் | இவ் விடயம் தொடர்பாக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும், இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலகக் கட்டிடம், பொதுநூலகம், பொதுச்சந்தை, பொது வளையாட்டு மைதானம், வாகனத் தரிப்பிடம், பசளை மீள் சுழற்சி நிலையம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள உரிமத்தினை மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 37 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் உரிமை மாற்றம் செய்யப்படல் வேண்டும். | வாகனங்களுக்கும் உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 48 பதவி வெற்றிடங்களும் 03 மேலதிக ஆளணிகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை அதன் அவசியத்திற்கமைய நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும். | கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய சதுக்கக் கடை கட்டிடத் தொகுதியின் இலக்கம் 08 மற்றும் 10 கடையறைகள் 2018 மார்ச் முதல் சபையின் இரு உறுப்பினர்களிற்கு மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 180 ஆம் பிரிவிற்கு முரணாக வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையின் இரு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடைகள் மீளப் பெறுவதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவுப் புத்தகம் (Fixed Asset Register) பேணப்படவில்லை என்பதுடன் தற்காலிகமாக பேணப்படும் பதிவுக் கோவையில் உரியவாறாக 2019 ஆண்டுக்கான சொத்துக் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பாக பதியப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவுப் புத்தகம் பேணப்படல் வேண்டும். | எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சீர்செய்யப்படும். |

#### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திருத்தம் செய்யக்கூடிய 10 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக திருத்தப்படாத நிலையில் காணப்பட்டிருந்தும் அவற்றை திருத்துவதற்கும் மேலும் பாவிக்கமுடியாத நிலையில் உள்ள 22 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையில் திருத்தப்படக்கூடிய வாகனங்களை தற்போது திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சபையின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை இனங்கண்டு அவற்றையும் சபையின் அனுமதியுடன் ஏலவிற்பனைக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்புவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

#### 3.5.3 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தீயணைப்புப் படைப்பிரிவின் பாதுகாப்பு உபகரணங்கள், தீயணைப்பு கருவிகள் மற்றும் நீர்குழாய் பொருத்துக்கள் என்பன இரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தப்படாது மக்களுக்கு குறித்த நேரத்தில் அவசர சேவையை வழங்கமுடியாதுள்ள நிலைமையில் காணப்பட்டிருந்தது. | பொது நலனை உச்சப்படுத்தும் நோக்கத்திற்குபயன் படுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சீர்செய்யப்படும். |
| (ஆ) கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்தில் சிறுவர் கடற்கரைப் பூங்கா முறையே ரூபா 26,780,072 மற்றும் ரூபா.8,267,830 செலவில் | சிறுவர் கடற்கரைப் பூங்கா மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள | இப் பூங்கா அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே இங்கு காவற் கடமைக்காக ஊழியர்கள் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| அமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இவை சபையினால் பயன்படத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகிறது. | உபகரணங்கள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எனினும் இதற்குரிய பாதுகாப்பு வேலிகள் கரையோர பாதுகாப்பு திணைக்கள அறிவுறுத்தலின் பிரகாரம் கடற்கரைப் பக்கமாக அகற்றப்பட்டதனால் திறந்த அடிப்படையில் கடற்கரைப் பூங்கா ஆக்கப்பட்டது. இதனால் காவற்கடமைகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்கள் காணப்பட்டன அத்தோடு விசமிகள் சிலரால் வேண்டுமென்றே பொருட்கள் பல சேதப்படுத்தப்பட்டுள்ளது இருந்த போதிலும் இவ் வருடம் இப்பூங்கா புனரமைப்புக்காக சபையின் அங்கிகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலத்தில் பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டில் 05 கணணி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரப்பட்டு 05 நிறுவனங்களிடம் இருந்து விலை மனுக்கள் பெறப்பட்டு கணணிகள் குறித்த ஒரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், விலைமனு பெறப்பட்ட ஏனைய நிறுவனங்கள் நீண்ட காலமாக மூடப்பட்டும் கணணி விற்பனைகளோடும் தொடர்புபடாதும் காணப்பட்டன. | விலை மனுக்கள் கோருகையில் நிறுவனங்கள் குறித்த பொருட்களின் வினியோகத்தில் ஈடுபடுவதினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இக் கொள்வனவு தொடர்பாக கேள்வி மனுக்கள் பெறப்பட்ட நிறுவனங்கள் குறித்த கொள்வனவு பொருட்கள் சம்பந்தமாக எமது மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட அடிப்படையிலும் மாகாண சபையிலும் பதிவு செய்யப்பட்ட Supplier Register இல் இடம் பெற்ற அடிப்படையில் கேள்வி மனுக்கள் கோரப்பட்டு பதிவுத் தபாலில் பெறப்பட்டு கொள்வனவு வழிகாட்டிகளுக்கு அமைய கொள்வனவு இடம் பெற்றுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் 2019 ஆம் ஆண்டு தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளல் வேண்டும். | தற்போது சீர் செய்யப்பட்டு ஏனைய கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) இறைச்சிக் கடை குத்தகைப் பிணைப்பணம் ரூபா 544,154 பெறுமதியான 06 காசோலைகள் 2012 ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டபின் வங்கியால் மறுக்கப்பட்ட போதிலும், இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தினை திரட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக போதிய ஆவணம் இல்லாமல் உள்ளது. |
| (ஆ) அலுவலகத்தின் அமைவிடத்தைக் காட்டும் தளவமைப்பு பலகையை தயாரித்து பொருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது இருந்த போதிலும் இன்று வரை குறித்த வேலை செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த பலகைகள் பொருத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 3 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கணக்கிலும் ரூபா 2,468,590 தொகை நடைமுறைக்கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாகாண அபிவிருத்தி வேலைகளுக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு குறித்த நிதி நிலையான வைப்பில் இருந்து மீளப்பெற்று பயன்படுத்த நடவடிக்கைகள் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 124,969 தொகைக்கு மாணவர்களுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி பாடசாலை ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அப்பொருட்கள் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்குறிப்பிட்ட பொருட்களை உரிய பாடசாலை அதிபர் பெற்றுக் கொண்டமைக்கான சான்றை சமர்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் இத் தொகையை அறவிட முன்னால் மாநகர சபை உறுப்பினருக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |